# நோயாளிகள், பராமரிப்பாளர்கள் மற்றும் குடும்பங்களுக்கான தகவல்

## Between The Flags: நோயாளிகளைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்

'நியூ சவுத் வேல்ஸ் ஹெல்த்' (NSW Health), ‘Between the Flags’ எனும் ஒரு பாதுகாப்பு அமைப்பைக் கொண்டுள்ளது. நோயாளி ஒருவரின் சுகயீனம் இன்னும் மோசமடைவதற்கான ஆரம்ப அறிகுறிகளை அடையாளம் காண இது சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்களுக்கு உதவுகிறது. அதன்பின்னர், நிலைமைக்கேற்றவாறு ஊழியர்களால் திறம்பட செயலாற்ற முடியும்.

நீங்கள் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்ய, 'Surf Life Savers' எனும் உயிர் காப்பாளர்கள், கடற்கரையில் உங்களைக் கண்காணிக்கும் விதத்தை 'Between the Flags' பிரதிபலிக்கிறது.





## தரநிலைக் கண்காணிப்பு விளக்கப்படங்கள்

நியூ சவுத் வேல்ஸ்-இல், நாங்கள் 'Between the Flags' கண்காணிப்பு விளக்கப்படங்களைப் பயன்படுத்துகிறோம். இது காகித வடிவத்தைக் கொண்டிருக்கலாம் அல்லது இதைக் கணினியில் பார்க்கலாம். உங்கள் சுவாசம் மற்றும் இதயத் துடிப்பு, இரத்த அழுத்தம் மற்றும் வெப்பநிலை, அத்துடன் பிற அவதானிப்புகளை சுகாதாரப் பராமரிப்புப் பணியாளர்கள் அட்டவணையில் ஒழுங்காகப் பதிவு செய்வார்கள்.

நோயாளிகளின் உடல்நிலை இன்னும் மோசமடையும் போது, அதை சுகாதாரப் பராமரிப்புப் பணியாளர்கள் விரைவாக அடையாளம் காண உதவுவதற்காக, விளக்கப்படங்கள் நிறங்களால் குறியிடப்பட்டுள்ளன. பெரும்பாலான நோயாளிகளுக்கு வெள்ளை நிறப் பகுதியில்தான் (White Zone) அவதானிப்புகள் இருக்கும்.

விளக்கப்படத்தில் நிறங்களால் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள் பற்றி அடுத்த பக்கத்தில் விளக்கப்பட்டுள்ளது.

NH700228 070622

NSW GOVERNMENT | CLINICAL EXCELLENCE COMMISSION

SHPN (CEC) 220422 | ஜூன் 2022

# நோயாளிகள், பராமரிப்பாளர்கள் மற்றும் குடும்பங்களுக்கான தகவல்

## Between The Flags: நோயாளிகளைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்

### நீல நிறப் பகுதி (Blue Zone)

குழந்தைகள், சிறார்கள் மற்றும் மகப்பேறு நோயாளிகளுக்கான அட்டவணைகளில் 'நீல நிறப் பகுதி' காணப்படுகிறது. அவதானிப்புகள் 'நீல நிறப் பகுதி'-க்குள் இருந்தால், குறித்த நோயாளி சுகவீனமடைந்து இருக்கக்கூடும், அத்துடன் சுகாதாரப் பணியாளர்கள் அவரை மிகவும் உன்னிப்பாகக் கண்காணிப்பார்கள்.




### மஞ்சள் நிறப் பகுதி (Yellow Zone)

அவதானிப்புகள் 'மஞ்சள் நிறப் பகுதி'-க்குள் இருந்தால், குறித்த நோயாளி இன்னும் கூடுதலாக சுகவீனமடைந்து இருக்கலாம். மருத்துவ மீளாய்வு மதிப்பீடு ஒன்றை பூர்த்திசெய்ய, ஒரு மருத்துவர் அல்லது மூத்த செவிலியர்/மகப்பேறுக்கான செவிலியரை சுகாதாரப் பராமரிப்புப் பணியாளர்கள் அழைக்கக்கூடும். இதன் அர்த்தம் என்னவென்றால், குறித்த நோயாளி பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்யும் முகமாக 30 நிமிடங்களுக்குள் பார்க்கப்படுவார் என்பதாகும்.




### சிவப்பு நிறப் பகுதி (Red Zone)

அவதானிப்புகள் 'சிவப்பு நிறப் பகுதி'-க்குள் இருந்தால், குறித்த நோயாளியின் உடல்நிலை தீவிரமாக மோசமடைந்திருக்கக்கூடும், அத்துடன் சுகாதாரப் பணியாளர்கள் 'துரிதப் பதில் நடவடிக்கை' (Rapid Response) ஒன்றிற்கு அழைப்புவிடுப்பார்கள். இதன் அர்த்தம் என்னவென்றால், அனுபவம் வாய்ந்த ஊழியர் குழு ஒன்று விரைவாக நோயாளியின் படுக்கையை வந்தடையும் என்பதே ஆகும்.

உங்களின் அல்லது நீங்கள் பராமரிக்கும் நபரின் நிலையில் ஒரு கவலைக்குரிய மாற்றத்தை நீங்கள் அடையாளம் காணக்கூடும். REACH-ஐப் பற்றி உங்கள் சுகாதாரப் பராமரிப்புப் பணியாளர்களிடம் பேசுங்கள். REACH என்பது, நோயாளி மற்றும் குடும்பத்தால் செயற்படுத்தப்படும் தீவிர நிலை ஆகும். REACH என்பது, கண்டறிதல் (Recognise), ஈடுபடுதல் (Engage), செயற்படுதல் (Act), அழைப்புவிடுத்தல் (Call) மற்றும் உதவி வந்துகொண்டிருக்கிறது (Help is on its way) என்பவற்றைக் குறிக்கிறது.

### நோயாளிகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான மற்றைய திட்டங்கள்

'Between the Flags' அமைப்பைப் போலவே, நீங்கள் மருத்துவமனையில் இருக்கும்போது உங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவும் REACH, Sepsis மற்றும் Partnering with People போன்ற பிற திட்டங்களும் உள்ளன. நோயாளிகளின் பாதுகாப்புத் திட்டங்களைப் பற்றி எங்கள் வலைத்தளத்தில் மேலும் அறியுங்கள்:www.cec.health.nsw.gov.au



ஏற்புத்தெருவித்தல்:
இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, அவர்களின் நிறங்களையும் வாசகங்களையும் பயன்படுத்த எம்மை அனுமதித்த Surf Life Saving Australia-க்கு NSW Health நன்றி தெரிவிக்கிறது. அவர்களின் ஆதரவை நாங்கள் பாராட்டுகிறோம். "எப்போதும் சிவப்பு மற்றும் மஞ்சள் கொடிகளுக்கு இடையில் நீந்தவேண்டும்" என்பதை நினைவில் கொள்ளுங்கள். Surf Life Saving Australia பற்றிய கூடுதல் தகவல்களை இங்கே காணலாம்:https://sls.com.au/